In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi
S.C.No.250/2022
Deposition of P.W.2

| | |
|---|---|
| Name | திரு.அழகர்சாமி |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 11th day of December 2024.

(1 வது எதிரி ஆஜர் செய்யப்பட்டார்.2 வது எதிரி ஆஜர்.3 வது எதிரி ஆஜர் இல்லை.3 வது எதிரியின் வருகையின்மையை மன்னிக்க பிரிவு 355 பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை** :

நான் மருதன்வாழ்வு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி அழகர்சாமி என்னுடைய பெரியப்பா. எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும். (1,2 எதிரிகள் ஆஜர்.3 வது எதிரி ஆஜர் இல்லை. அவரது வருகையின்மையை மன்னிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு ஏற்கப்பட்டது) 01.07.2022 ம் தேதி காலை 11 மணியளவில் பஞ்சாயத்து தலைவரை பார்க்கவேண்டி அழகர்சாமி வீட்டு வழியாக சென்றேன். அப்போது எனக்கு எதிரே எதிரிகள் மூவரும் வந்து கொண்டிருந்ததை பார்த்தேன். நான் அதன்பின்னர் வேலைக்கு சென்றுவிட்டு மாலை6 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்கு வந்தவுடன் என் மனைவி என் பெரியம்மா மீனாட்சி இறந்துவிட்டதாக என்னிடம் சொன்னார். நான் அழகர்சாமியின் வீட்டிற்கு இரவு 7.30 மணியளவில் சென்று பார்த்தேன்.

அழகர்சாமியின் மனைவி மீனாட்சி இறந்துகிடந்ததை பார்த்தேன். மறுநாளும் அழகர்சாமியின் வீட்டிற்கு துக்கத்தில் கலந்து கொள்ள சென்றேன். அன்றைய தினம் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன்பின்னர் 04.07.2022 ம் தேதி என்னை போலீசார் மீண்டும் விசாரித்தார்கள். அப்போது மீனாட்சியை எதிரிகள் மூவரும் கொலை செய்துவிட்டதாகவும் தெரிந்து கொண்டேன்.

**<u>1,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1 முதல் 3 எதிரிகள் அழகர்சாமியின் வீட்டருகே வசித்து வருகின்றனர் என்று சொன்னால் சரிதான். பஞ்சாயத்து தலைவியின் வீடும், 1 முதல் 3 எதிரிகள் வசிக்கும் அதே பகுதியில் உள்ளது என்று சொன்னால் சரிதான். 1 முதல் 3 எதிரிகள் வசிக்கும் பகுதியில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.அந்த பகுதி ஜனநடமாட்டம் மிகுந்த பகுதி என்று சொன்னால் சரிதான். 01.07.2022 ம் தேதி முற்பகல் 11 மணிக்கு பின்னர் அந்த பகுதியில் யார் யாருடைய நடமாட்டம் இருந்தது என்று எனக்கு தெரியாது. 1 முதல் 3 எதிரிகளை 01.07.2022 ம் தேதி முற்பகல் 11 மணியளவில் பார்த்ததாக நான் கூறுவது உண்மையல்ல என்றுசொன்னால் சரியல்ல. அழகர்சாமி என்னுடைய பெரியப்பா என்பதால் காவல் துறையினர் சொல்லிக்கொடுத்தபடி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. நான் அழகர்சாமியின் வீட்டிற்கு சென்றபோது அங்கிருந்தவர்கள் மீனாட்சியின் மரணம் குறித்து சந்தேகித்து எதுவும் பேசிக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

**<u>2 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

( 1 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி குறிப்பாணை பதிவு செய்யப்பட்டது)

**<u>மறுவிசாரணை :</u>**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரிகள் / எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

MADHAVA RAMANUJAM S

Digitally signed by MADHAVA RAMANUJAM S
Date: 2024.12.11 17:33:39 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.